2,944 ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. ஆகவே, பொருளாதார அடிப்படையில் இத்திட்டம் பயனுடையது அல்ல என்று கருதி, கைவிடப்பட்டது. நமது பொருளாதார நிலைமை சீர்படும்போது மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

Rationalisation of levy of Sales Tax

* 62 *Q.*—THIRU N. DENNIS :
THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the rationalisation of Sales Tax structure has been undertaken in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(இ) வணிக வரிகள் சட்டங்களையும் விதிகளையும் எளிதாக்கிச் சீரமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்ய சிறப்புப் பணி அதிகாரி ஒருவரை அரசு நியமித்துள்ளது. விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் அதன் ஆளுகைக்குட்பட்ட மேல்முறையீட்டு நீதி மன்றங்கள் உட்பட, வணிக வரித் துறையின் நிர்வாக அமைப்பு குறித்து ஆய்வு செய்யுமாறும் அந்த அதிகாரி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அந்தக் கமிட்டி எப்போது அறிக்கை சமர்ப்பிக்கும் ? அந்த அறிக்கை சபையில் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு ஒருமுனை விற்பனை வரி விதிப்பதுபற்றி ஆலோசித்திருக்கிறதா ? அறிக்கை வந்த பின்னுல் மேற்கொண்டு முடிவு செய்யப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தக் குழுவானது ஒருமுனை விற்பனை வரி விதிப்பதுபற்றி ஆலோசித்திருக்கிறதா ? இல்லை என்றால் அந்தவிதத்திலே அறிக்கை வேண்டுமென்று அரசாங்கம் கேட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றியும் ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இந்த ஒருமுனை விற்பனை வரி இல்லாததனால், வரி விதிப்பு அதிகாரிகள் தங்கள் சொந்த அபிப்பிராயப்படி நிர்ணயம் செய்கிறார்கள். அதனால் அதிக வரி விதிக்கப்பட்டு, தொந்தரவுகளுக்கு ஆளாகிறார்கள் என்று அரசாங்கத்திற்கு ஏதாவது கம்பிளேன்ட் வந்திருக்கிறதா? பல பண்டங்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதித்தால் அரசாங்கத்திற்கு இன்னும் அதிகமான வருமானம் கிடைக்கும் என்று தெரிகிறது. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதிக வரி விதிக்கப்படுகிறது என்று சொல்வது சரியல்ல. நியாயமான முறையில்தான் உரிய வரி விதிக்கப்படுகிறது. ஒருமுனை விற்பனை வரியினால் என்னென்ன பலன் கிடைக்கும் என்று பரிசீலனை செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்தக் குழுவிலே எத்தனைபேர் இருக்கிறார்கள்? அவர்களில் அஃபிஷியல்ஸ் எத்தனை பேர்; நான் அஃபிஷியல்ஸ் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அது 'ஒன் மேன் கமிஷன்'. அதற்குத் தலைவர் திரு. எஸ். பி. சீனிவாசன், ஐ.ஏ.எஸ்.; செயலாளர் திரு. நாசிம்மன். ஐ. ஏ. எஸ்.

Renovation of Mosques

* 63 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that steps have been taken by the Government to renovate important and ancient Mosques in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(இ) அதன் விபரங்கள் பற்றி இன்னும் முடிவு செய்யப்பட வில்லை.